ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2121/51 - 2019 මැයි මස 03 වැනි සිකුරාදා - 2019.05.03

*2121/51 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கலிகமுவ நீர் வழங்கல் செயற்திட்டத்தின் வேரகொட நீர் சேகரிப்புத் தொட்டிக்கான உட்செல்லும் வழியை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதிகளின் வழியுரிமையை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, "லக்தியமெதுர", புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஏப்பிறல் 29.
3/2/2/1462.

**அட்டவணை**

*கேகாலை மாவட்டத்தில், கலிகமுவ பிரதேச செயலகப் பிரிவில் இலக்கம் 73ஏ, வேரகொட கிராம அலுவலர் பிரிவில் வேரகொட கிராமத்தில் கலேவத்த, மராவேஹேன, தெனடவத்த மற்றும் மஹமராவேவத்த என்றழைக்கப்படுகின்ற, உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. எல். சீ. கே. லியனகே அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள 2018.09.15 ஆந் திகதிய மற்றும் 4062 ஆம் இலக்க திட்டப்படத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காணிகளின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 10 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதிகள்–*

**1. துண்டு இலக்கம் : 01 – விஸ்தீரணம் : 3.9 பேர்ச்சஸ்**

வடக்கு : திரு. ஆர். எம். ஏ. பி. ரணதுங்க அவர்கள் உரிமை கோருகின்ற மஹாமாராவத்த ;
கிழக்கு : குறித்த திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 02 ;
தெற்கு : குறித்த திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 02 ;
மேற்கு : திரு. ஆர். எம். ஏ. பி. ரணதுங்க அவர்கள் உரிமை கோருகின்ற மஹாமாராவத்த.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :*

ஆர். எம். ஏ. பி. ரணதுங்க,
ஹத்நாகொட,
பெலிகல.

**2. துண்டு இலக்கம் : 03 – விஸ்தீரணம் : 3.8 பேர்ச்சஸ்**

வடக்கு : குறித்த திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 02 ;
கிழக்கு : திரு. பி. ஜீ. ஐ. ஆர். தர்மசேன அவர்கள் உரிமை கோருகின்ற மாராவேஹேன தற்போது தோட்டம் ;
தெற்கு : திரு. பி. ஜீ. ஐ. ஆர். தர்மசேன அவர்கள் உரிமை கோருகின்ற மாராவேஹேன தற்போது தோட்டம் ;
மேற்கு : குறித்த திட்டப்படத்தின் துண்டு இலக்கம் 02.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :*

பி. ஜீ. இசுரிகா றுவன்தி தர்மசேன,
இசுர,
வேரகொட,
பெலிகல.

**3. துண்டு இலக்கம் : 04 – விஸ்தீரணம் : 0.9 பேர்ச்சஸ்**

வடக்கு : திரு. பி. ஜீ. ஐ. ஆர். தர்மசேன அவர்கள் உரிமை கோருகின்ற மாராவேஹேன தற்போது தோட்டம் ;
கிழக்கு : குறித்த காணியின் துண்டு இலக்கம் 02 ;
தெற்கு : குறித்த காணியின் துண்டு இலக்கம் 02 மற்றும் 05 ;
மேற்கு : திரு. பி. ஜீ. ஐ. ஆர். தர்மசேன அவர்கள் உரிமை கோருகின்ற மாராவேஹேன தற்போது தோட்டம்.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :*

பி. ஜீ. இசுரிகா றுவன்தி தர்மசேன,
இசுர,
வேரகொட,
பெலிகல.

***4. துண்டு இலக்கம் : 05 - விஸ்தீரணம் : 1.4 பேர்ச்சஸ்***

*வடக்கு : திரு. டி. ஆர். எஸ். தசநாயக்க அவர்கள் உரிமை கோருகின்ற கலேவத்த காணி மற்றும் குறித்த காணியின் துண்டு இலக்கம் 02 ;*
*கிழக்கு : குறித்த காணியின் துண்டு இலக்கம் 02 ;*
*தெற்கு : குறித்த காணியின் துண்டு இலக்கம் 02 மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி ;*
*மேற்கு : திரு. டி. ஆர். எஸ். தசநாயக்க அவர்கள் உரிமை கோருகின்ற கலேவத்த காணி.*

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் :*

*டி. ஆர். சமன் தசநாயக்க,*
*சமன்பாய, வேரகொட,*
*பெலிகல.*

*05-390*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.